சார்பு நீதிமன்றம், குளித்தலை

O.S.No.1/2016

பெயர்: கனகா 06.06.2022

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1ம் பிரதிவாதியின் கணவர் பெயர் செவந்தலிங்கம். மேற்படி செவந்தலிங்கம் 2ம் பிரதிவாதி செந்தில் சிறுவயதாக இருந்த போதே இறந்துபோய்விட்டார். 2ம் பிரதிவாதி செந்திலை நான் தான் வளர்த்தேன். 1ம் பிரதிவாதி மாரியாயி செவந்தலிங்கம் இறந்த பின்பு வேறு ஒருவருடன் சென்றுவிட்டார். 1ம் பிரதிவாதி வேறு ஒருவருடன் சென்றுவிட்டதால் அவருக்கு சொத்தில் உரிமை கிடையாது என்றால் சரிதான். இந்த வழக்கில் 1ம் பிரதிவாதியை சேர்க்க வேண்டுமென்பதற்காக சேர்த்துள்ளேன். 1ம் பிரதிவாதி வேறு நபருடன் குடும்பம் நடத்த சென்ற விபரத்தை பிராதில் சொல்லவில்லை. தாவா 4 இலக்க சொத்தை எனது அப்பா மற்றும் சகோதரர்கள் சேர்ந்து பொன்னுசாமி என்பவருக்கு ஈட்டு அடமானம் வைத்த விபரம் எனக்கு பிறர் சொல்லி தெரியும். அந்த ஈட்டு அடமான பத்திரத்தில் நான் கையெழுத்து எதுவும் போடவில்லை. 45 வருடங்களுக்கு மேலாக தாவா 4 வது அயிட்ட சொத்து பெரியசாமி, செவந்தலிங்கம் அவர்களுக்கு பாத்தியப்பட்டது என்பதால் தான் ஈட்டு அடமான பத்திரத்தில் என்னை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. எனது கணவர் கருப்பண்ணன் இறந்து சுமார் 5 வருடமாகிறது. எனக்கு நான்கு குழந்தைகள். எனது கணவர் கரூர் நூற்பாலையில் வேலை பார்த்தார். எனக்கு சேட்டு என்பவரை தெரியாது. எனது குழந்தைகள் சிறு பிள்ளைகளாக இருந்த போது அவர்களை விட்டு விட்டு சென்னையில் டுமில்குப்பம் என்ற பகுதியில் சேட்டு என்பவருடன் வசித்து வந்தேன் என்றால் சரியல்ல. சொத்துக்காக எனது பிள்ளைகள் என்னை சேர்த்து வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. வழக்கில் நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கில் பொய்யான சங்கதிகளை கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. ரயில்வே சொத்திற்கு எங்கள் செல்வாக்கை பயன்படுத்தி பட்டா தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் நான் தாக்கல் செய்துள்ள வழக்கு

தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

ஒம்/ கனகா

M SHUNMUGA KANI

Digitally signed by M SHUNMUGA KANI
DN: cn=M SHUNMUGA KANI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2022.06.09 12:18:49 +0530

சார்பு நீதிபதி,

குளித்தலை.